**DEPOSITION OF WITNESS**

(ChapterXXIII Code of Criminal Procedure)

**-----------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR**

**CC.No.71/2022**

**Date : 19.05.2025**

**<u>PW3 விஜயா க/பெ. சகாயராஜ்</u>**

**<u>1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

துணை பதிவாளர் (பால்வளத் துறை) பெரம்பலூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.668/2015/இ, நாள் 16.02.2015 ஆணையின் அடிப்படையில் விசாரணை அதிகாரியாக என்னை நியமனம் செய்தார்கள். அன்றைய தேதியிலிருந்து எனது விசாரணை ஆரம்பமாகிறது என்றால் சரிதான். மூன்று மாதத்தில் விசாரணை முடியவில்லை. விசாரணை தொடர காலநீட்டிப்பு கேட்டிருந்தேன். காலநீட்டிப்பு கடிதத்தை போலீஸாரிடம் நான் கொடுத்தேனா என்றால் என்னுடைய அலுவலகத்தில் கொடுத்தேன். இரண்டு முறை காலநீட்டிப்பு கடிதத்தை கொடுத்தேன். உண்மையிலேயே நான் கால நீட்டிப்பு கடிதம் கொடுத்திருந்தால் அதை போலீஸார் நீதிமன்றத்தில்தாக்கல் செய்திருப்பார்கள் என்றாலும், நான் காலநீட்டிப்பு கேட்கவில்லை என்றால் சரியல்ல. அறிக்கை சமர்ப்பித்த அன்றுதான் என்னுடைய விசாரணையை முடித்தேன் என்றால் சரிதான்.

2012 – 2013 மற்றும் 2013–2014 ஆண்டுகளுக்கு இறுதி தனிக்கை அறிக்கை செய்ய விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டேன். சாட்சிகள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்களை என்னுடைய அலுவலகத்திற்கு வரவழைத்து விசாரணை செய்தேன் என்றால் சரிதான். ஒரு நாளில் ஒரு சாட்சியைத்தான் விசாரணை செய்தேன். ரவிச்சந்திரனையும், செல்லமுத்து என்பவரையும் ஒரே நாளில் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் விசாரித்த தேதியிலேயே வாக்குமூலம் வாங்கினேன்.

அ.சா.ஆ.12ல் 29 என்ற தேதி Overwriting செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பெற்ற வாக்குமூலங்களில் என்னுடைய கையொப்பம் உள்ள பகுதிகளில் தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாக்குமூலங்களை நான் சாட்சிகளிடம் வாங்கவில்லை என்றாலும், வேறொரு நபர்கள் மூலம் தயார் செய்யப்பட்டதில் நான் கையொப்பம் செய்ததால்தான் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

அதனால்தான் அ.சா.ஆ.9ல் இரண்டாவது பக்கத்தில் நான் என்னுடைய கையொப்பத்தை செய்யவில்லை என்றால் சரியல்ல. கையொப்பம் செய்ய மறந்துவிட்டேன். என்னுடைய விசாரணை காலத்தில் நூத்தப்பூர் பால் சொசைட்டியில் எத்தனை பேர் பணியில் இருந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. நான் நூத்தப்பூர் பால் கூட்டுறவு சங்கத்திற்கு சென்று விசாரணை செய்யவில்லை. அங்கிருந்த ஆவணங்களை மட்டும் எடுத்து வந்தேன். 17.12.2015 அன்று நான் நூத்தப்பூர் பால் கூட்டுறவு சங்கத்திற்கு சென்று சங்க செயலாளர் ரவிச்சந்திரன் என்பவரிடம் ஆணங்களை கைப்பற்றினேன். நூத்தப்பூர் பால் உற்பத்தி சங்கத்தில் உறுப்பினர் எத்தனை பேரை விசாரணை செய்தீர்கள் என்றால் உறுப்பினர்கள் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை.

என்னுடைய விசாரணையானது நூத்தப்பூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் அலுவலர் ரவிச்சந்திரன் மற்றும் செல்லமுத்து ஆகியோர்களை மட்டும்தான் விசாரித்தேன். பால் சொசைட்டியில் கூட்டுறவு சங்க தலைவர் நடராஜன், சங்க தனி அலுவலர் சிவசுப்பிரமணியன் மற்றும் தனி அலுவலர் வனராஜன் ஆகியோர்களை விசாரணை செய்தேன். ஒவ்வொரு வருடமும் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் 1ம் தேதி முதல் அடுத்த ஆண்டு மார்ச் 31 வரை தனிக்கை செய்யப்படும். எனது விசாரணை காலங்களில் 2012 முதல் 2014 வரையிலான காலக்கட்டங்களில் நூத்தப்பூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சாங்கத்தில் தனிக்கை அலுவலராக பணியாற்றியவர் யார் என்றால் லெட்சுமணன். தனிக்கை அலுவலர் செட்சுமணன் என்பவரை விசாரணை

செய்தேனா என்றால் இல்லை. எனது விசாரணை காலங்களில் 2012 முதல் 2014 வரையிலான காலக்கட்டங்களில் நூத்தப்பூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சாங்கத்தில் தலைவர் பொறுப்பில் எந்த ஆண்டு, எந்த தேதி நியமிக்கப்பட்டார் என்றால் தேதி ஞாபகமில்லை.

2012–2013, 2013–2014 க்கு உண்டான தீர்மான புத்தகத்தை கைப்பற்றினேனா என்றால் கைப்பற்றினேன். தீர்மான புத்தகத்தை கைப்பற்றவில்லை என்றாலும், அதனால்தான் மேற்கண்ட நுத்தப்பூர் பால் உற்பத்தியாளர் தலைவர் எந்த தேதியில் பொறுப்பேற்றார் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

இனம் 1ல் அ.சா.ஆ.13ல் தேதி 14.06.2012ல் ரூ.35,000/–நாள் வழிபேரேட்டில் ரொக்க வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ–13ல் பக்கம் 75ல் இந்த ஆவணங்களை கைப்பற்றி நான் விசாரணை செய்தேன் என்பதற்கான எனது கையொப்பமோ, வேறு உயர் அதிகாரிகளன் கைபொப்பமோ இல்லை, செயலாளரின் கையொப்பம் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ. 13ல் நாள்வழிப்பேரேட்டில் 01.04.2012 முதல் 20.10.2012 வரையில் நூத்தப்புர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் தனிக்கை அலுவலர் லெட்சுமணன் என்பவர் தனிக்கை செய்ததற்கான எவ்விதமான கையெழுத்தும் இல்லை என்றால் சரிதான். எனது விசாரணை அறிக்கையில் தனிக்கை அலுவலர் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ. 13 நாள்வழிபேரேடு பக்கம் 80ல் விசாரணை அதிகாரியான நான் எவ்வித குறைபாடுகளை கண்டறிந்து அதனை இதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக குறைபாடுகளை கண்டறிந்து அறிக்கையில் குறிப்பிடுவோம். சம்மந்தப்பட்ட பதிவேடுகளில் நாங்கள் மேலெழுத்து செய்து காண்பிக்கமாட்டோம். இனம் 1ல் கண்டுள்ள 14.06.2012ல் காசோலை மூலம் ரூ.35,000/–ஐ எடுக்கப்பட்டதற்காக அதற்கான காசோலை நகலை தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கான வங்கி கணக்கு பதிவேடு தாக்கல் செய்துள்ளேன்.

காசோலையில் கையெழுத்து போடுவதற்கு யார், யாருக்கு அதிகாரம் உள்ளது என்றால் சங்க செயலாளர், சங்க தனி அலுவலர் ஆகியோர்களுக்கு அதிகாரம் உள்ளது. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 14ல் பக்கம் 60ல் செயலாளர் கையொப்பம் செய்துள்ளார் என்றாலும், தனி அலுவலர் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரிதான்.

**போதிய நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.